தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

&

இந்தியவானிலைத் துறை

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை

# தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(16.04.2025 முதல் 20.04.2025)

அறிக்கை எண் 05/2025 தேதி. 15.04.2025

## தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

தஞ்சாவூர் மாவட்டத்தின் 11.04.2025 முதல் 14.04.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36 - 38 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை தஞ்சாவூர் (16.04.2025 முதல் 20.04.2025)

| கடந்த வார வானிலை (11.04.2025 முதல் 14.04.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 20.04.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 11/04 | நாள்-2 12/04 | நாள்-3 13/04 | நாள்-4 14/04 | தேதி | நாள்-1 16/04 | நாள்-2 17/04 | நாள்-3 18/04 | நாள்-4 19/04 | நாள்-5 20/04 |
| 0.0 | 29.1 | 0.0 | 0.2 | மழை (மி.மீ) | 4 | 3 | 3 | 3 | 4 |
| 38 | 38 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 37 | 37 |
| 29 | 27 | 28 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 28 | 29 | 29 |
| 6 | 6 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 6 | 6 |
| 73 | 86 | 80 | 80 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 85 | 85 |
| 72 | 72 | 75 | 72 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 75 | 75 |
| 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 2 | 2 | 2 | 4 | 2 |
| கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் கிழக்கு | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 16.04.2025 முதல் 20.04.2025 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 - 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 29 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 2 - 4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது** | | வரும் நாட்களில் மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் தேவைக்கேற்ப நீர் பாய்ச்சவும். |
| **நெல்** | **நாற்றாங்கால்** | கோடை பருவத்திற்கு ஏற்ற குறுகிய கால நெல் இரகங்களான ஆடுதுறை 53, ஆடுதுறை 56, ஆடுதுறை 57 மற்றும் ஆடுதுறை 59 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |
| **பயறுவகை பயிர்கள்** | | *பயறுவகை பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் தாக்கம் தென்பட்டால் 5 சத வேப்பங்கொட்டை சாறு கரைசலை தெளிக்கவேண்டும்.* |
| | **அறுவடை** | *முதிர்ந்த உளுந்து மற்றும் பாசிபயறு பயிர்களை அறுவடை செய்யவும்.* |
| **தென்னை** | | *தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைத்து கோடையில் மழை நீரை மண்ணில் சேமிக்கவும்.* |
| **கால்நடைகளுக்கு** | **மாடு** | *கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க **3.0** மி.லி பியூடாக்ஸ் மருந்தை **1** லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்கவும்.* |

## குறுஞ்செய்தி

- *வரும் நாட்களில் மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் தேவைக்கேற்ப நீர் பாய்ச்சவும்.*

.

**இயக்குநர்**